## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மீற்றர்முறை அளவை அலகுகள் (விளைவாந் தன்மையினவான ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*[1983, பெப்ருவரி மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

**1983, பெப்ருவரி மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.00

தபாற் செலவு : சதம் 75

**1983 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மீற்றர்முறை அளவை அலகுகள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

[1983, பெப்ருவரி மாதம் 10 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 96/80
1415

**1978 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, மீற்றர்முறை அளவை அலகுகள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மீற்றர்முறை அளவை அலகுகள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். குறுக்கப் பெயர்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 40 ஆம் இலக்க, மீற்றர்முறை அளவை அலகுகள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :— 1978 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கச் சட்டத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்.

**'அட்டவணை**

| நிரை I<br>சட்டவாக்கம் | நிரை II<br>திருத்தங்கள் |
|---|---|
| 1. மின்சாரச் சட்டம். | 1. பதின்மூன்றும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் 3 ஆம் நிரையில்—<br>(i) " ஓர் அங்குலத்துக்கு 16 சங்கிலிகள் " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக " 1 : 10000. " என்னும் எண்களை இடுக ;<br>(ii) " ஓர் அங்குலத்துக்கு 20 அடி " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக " 1 : 200. " என்னும் எண்களை இடுக ;<br>(iii) " ஓர் அங்குலத்துக்கு 40 அடி " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, " 1 : 500. " என்னும் எண்களை இடுக ;<br>(iv) " ஓர் அங்குலத்துக்கு 2 சங்கிலிகள் " என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக " 1 : 2000. " என்னும் எண்களை இடுக ;<br>(v) " ஓர் அங்குலத்துக்கு 1 மைல் " என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, " 1 : 50,000. " என்னும் எண்களை இடுக ;<br><br>2. இருபத்துமூன்றும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் " முப்பத்துமூன்று அடி " என்னும் சொற்களுக்குப் பதிலாக " 10 மீற்றர்கள் " என்னும் எண்ணையும் சொல்லையும் இடுக.<br><br>3. இருபத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் " எட்டடிக்கு ஓர் அங்குலம் " என்னும் சொற்களுக்கும், " மைலுக்கு பதினாறு அங்குலம் " என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே " 1 : 100 " அத்துடன் " 1 : 5000 " என்னும் எண்களை இடுக. |

ச 1— 65668—7,065 (10/82)

| நிரல் I<br>சட்டவாக்கம் | நிரல் II<br>திருத்தங்கள் |
|---|---|
| | 4. முப்பத்துமூன்றும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் " நூற்றைம்பது அடி " என்னும் சொற்களுக்குப் பதிலாக " 45 மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொல்லையும் இடுக.<br><br>5. முப்பத்தெட்டாம் பிரிவில் " இருநூற்றி இருபத்தைந்து " என்னும் சொற்களுக்குப் பதிலாக " 65 மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொல்லையும் இடுக. |
| 2. பாண் கட்டளைச் சட்டம் | 2 ஆம் பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுக :—<br><br>"நிறை மூலம் பாண் விற்பனையும், துண்டங்களின் நிறை குறித்தலும்.<br><br>2. (1) பேக்கரிக்காரர் அல்லது பாண் வியாபாரி எவரும் மெருகுநிறைப் பாண் அல்லது சுருள் பாண் தவிர்ந்த பாண் எதனையும் இருநூற்றிருபத்தைந்து கிராம்கள், நானூற்றைம்பது கிராம்கள், தொளாயிரம் கிராம்கள் அல்லது ஓராயிரத்து எண்ணூறு கிராம்கள் நிறைகொண்ட துண்டங்களாகவன்றி விற்பனை செய்தலாகாது.<br><br>(2) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டதற்கமைவாக, பேக்கரிக்காரர் அல்லது பாண் வியாபாரி எவரும், பாண் துண்டத்தின் நிறையானது, பாண் கடுகையில் பதிப்பொன்றினால் துண்டத்தின் மீது அல்லது துண்டத்தைச் சுற்றியிடப்பட்ட பட்டியொன்றின் மீது அல்லது துண்டத்தை உள்ளடக்கியுள்ள பொதித்தாள் மீது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, எதேனும் பாண் துண்டத்தை விற்றலோ அல்லது விற்பனைக்காக அத்தகைய எதேனும் பாண் துண்டத்தை வெளிக்காட்டி வைத்தலோ ஆகாது :<br><br>ஆயின்,—<br><br>(அ) மெருகுநிறைப் பாண் அல்லது சுருள் பாண் அல்லது நிறையில் இருநூற்றிருபத்தைந்து கிராம்களுக்குக் குறைந்த எதேனும் பாண் துண்டத்தின் விடயத்தில் ; அல்லது<br><br>(ஆ) அதன்சார்பிலான எதேனும் ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையை ஐம்பது கிலோகிராம்களுக்கு குறையாத எதேனும் அளவினும் ஒப்படைப்பின் மீது நிறைபார்க்கப்படும் எதேனும் சிறப்பு நிகழ்ச்சியின்போது வழங்கப்படுகின்ற விடயத்தில்,<br><br>இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எவையும் ஏற்புடையனவாதல் ஆகாது.". |
| 3. மருத்துவத் தேவைகள் கட்டளைச்சட்டம் | 2 ஆம் பிரிவில், " தோட்டம் " என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுக :—<br><br>' " தோட்டம் " என்பது, தொழிலாளர்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளதும் தேயிலை, இறப்பர், கோப்பி, கொக்கோ, ஏலம், தென்னை, கர்ப்பூரம், மிளகு, அல்லது சிங்கோனா உண்மையாகப் பயிரிடப்பட்டுள்ள நான்கு ஏக்கர் காணியைக் கொண்ட எதேனும் தோட்டம் எனப் பொருளாகும் ; '. |

| நிரை I | நிரை II |
|---|---|
| சட்டவாக்கம் | திருத்தங்கள் |
| 4. சுங்கக் கட்டளைச் சட்டம் | 1. பத்தாம் பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுக. |

2. பத்தாம் பிரிவில், அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவுக்குப் பின்னர் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துக :—

" (2) ஏதாவது அளவைக்கூறுகளின் அடிப்படையின் மீது (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் கீழ் மாற்றப்பட்ட அல்லது சமத்தப்பட்ட தீர்வை ஒவ்வொன்றும் நிறுவைகள், அளவைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு சர்வதேச அலகுமுறைமைக்கிணங்க இருத்தல் வேண்டும். ".

3. பதினேழாம் பிரிவுக்குப் பதிலாக பின்வரும் பிரிவை இடுக :—

" இலங்கைக்கான அளவை அலகுகளுக்கிணங்க, இலங்கை நாணயத்தில் தீர்வைகள் செலுத்தப்படல் வேண்டும்.

17. இக்கட்டளைச் சட்டத்தின் கீழான எல்லாச் சுங்கத் தீர்வைகளும் அத்துடன் எல்லாத் தண்டங்களும் இதன்கண் எடுத்துக் கூறப்பட்டுள்ள பணத்தின் பல்வேறு விவரணங்களிலும் குறித்துரைக்கப்பட்ட செலாவணி வீதங்களிலும், அதாவது, பிரித்தானியப் பொற்காசு அல்லது வெள்ளிக் காசில் அல்லது அமைச்சரால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விவரணத்தினதான பணத்திலும் அத்தகைய செலாவணி விகிதத்திலும் இலங்கைக்கான அளவை அலகுகளுக்கிணங்கவும் செலுத்தப்படுதலும் பெறப்படுதலும் வேண்டும் என்பதுடன், எல்லா விடயங்களிலும், ஏதேனும் குறிப்பான தொகைக்கு அல்லது குறிப்பான பெறுமதிக்கு இணங்க, அத்தகைய தீர்வைகள் விதிக்கப்படும்போதும் அனுமதிக்கப்படும்போதும், அது, ஏதேனும் கூடிய அல்லது குறைந்த தொகைக்கு அல்லது பெறுமதிக்கு அதே விகிதாசாரத்தின் ஏற்புடையதாகுமெனக் கருதப்படுதலும் வேண்டும் ;

சுங்கத் தீர்வைகளின் வரவுகள் திறைசேரி முதலியவற்றிற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

அத்துடன், சுங்கத் தீர்வைகள் எல்லாவற்றினதும் வரும்படிகள், சேகரிப்பாளரால் திறைசேரிப் பிரதிச் செயலாளரிடம் அல்லது இலங்கையின் உப கணக்காளர்களிடம், அமைச்சரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலங்களிலும் செலுத்தப்படுதல் வேண்டும். ".

5. வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டம்

இக்கட்டளைச் சட்டத்துக்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்த அட்டவணையின் 2 ஆம் விதியின் (3) ஆம் பந்தியில் " 4 அடி " என்னும் எண்ணுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 1.2 மீற்றர்கள் " என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன் மூலம் ;

| நிரை I | நிரை II |
|---|---|
| சட்டவாக்கம் | திருத்தங்கள் |

(2) அந்த அட்டவணையின் 3 ஆம் விதியில்—

(i) அவ்விதியின் (அ) என்னும் பந்தியில்—

(அ) " 9 அடி " என்னும் எண்ணுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 2700 மில்லி மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன்மூலம் ;

(ஆ) " 7 அடி " என்னும் எண்ணுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 1200 மில்லி மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன்மூலம் ;

(ii) அவ்விதியின் (ஆ) என்னும் பந்தியில்—

(அ) " 120 சதுர அடி " என்னும் எண்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக " 11.1 சதுர மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) " 90 சதுர அடி " என்னும் எண்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக " 8.3 சதுர மீற்றர்கள் என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலம் ;

(iii) அவ்விதியின் (ஈ) என்னும் பந்தியில், " 8 அடி " என்னும் எண்ணுக்கும் சொல்லுக்கும் பதிலாக " 2400 மில்லிமீற்றர்கள் " என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலம் ;

(iv) அவ்விதியின் (உ) என்னும் பந்தியில், " 6 அடி " என்னும் எண்ணுக்கும் சொல்லுக்கும் பதிலாக " 1800 மில்லிமீற்றர்கள் " என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலம் ;

(v) அவ்விதியின் (ஊ) என்னும் பந்தியில், " 8 சதுர அடி " என்னும் எண்ணுக்கும் சொற்களுக்கும் பதிலாக, " 0.74 சதுர மீற்றர்கள் " என்னும் எண்ணையும் சொற்களையும் இடுவதன்மூலம் ;

(vi) அவ்விதியின் (எ) என்னும் பந்தியில், " ஒன்றரை அடி " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " 500 மில்லி மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன்மூலம் ;

(3) அவ்வட்டவணையின் 4 ஆம் விதியில்—

(i) அவ்விதியின் (ஆ) என்னும் பந்தியில், " 7½ அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 2200 மில்லிமீற்றர்கள் " என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன்மூலம் ;

(ii) அவ்விதிக்கான இரண்டாம் காப்பு வாசகத்தில் " 15 அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 4.5 மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(4) அவ்வட்டவணையின் 5 ஆம் விதியின் (1) ஆம் பந்தியில்—

(i) " 7½ அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, அப்பந்தியில் அவை காணப்படுமிடமெல்லாம், " 2.2 மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொல்லையும் இடுவதன் மூலம் ;

| நிரை I<br>சட்டவாக்கம் | நிரை II<br>திருத்தங்கள் |
|---|---|

(ii) " 20 அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, அப்பந்தியில் அவை காணப்படுமிடமெலாம், " 6 மீற்றர்கள் " என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(iii) " 3 அடி " என்னும் எண்ணுக்கும் சொல்லுக்கும் பதிலாக, "0.9 மீற்றர்கள் " என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(5) ஓராம் அட்டவணையின் 8 ஆம் விதியில—

(i) அவ்விதியின் (1) ஆம் பந்தியில்,—

(அ) " 40 அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 12 மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(ஆ) " 10 அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 3 மீற்றர்கள் " என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(இ) " 15 அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 4.5 மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(ஈ) " 20 அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 6 மீற்றர்கள் " என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(உ) " 18 அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 5.4 மீற்றர்கள் " என்னும் எண்களையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(ii) அவ்விதியின் (2) ஆம் பந்தியில—

(அ) " 30 அடி " என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, " 9 மீற்றர்கள் " என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(ஆ) "20 அடி" என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, "6 மீற்றர்கள்" என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன்மூலம் ;

(iii) அவ்விதியின் (3) ஆம் பந்தியில், "15 அடி" என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, "4.5 மீற்றர்கள்" என்னும் எண்களையும் சொல்லையும் இடுவதன்மூலம்;

(6) அவ்வட்டவணையின் 9 ஆம் விதியில், "1000 சதுர அடி" என்னும் எண்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக, "92.9 சதுர மீற்றர்கள்" என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலம்.

6. இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்

1. பதினாறும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுக :—

"உரிமம்பெற்ற வளவில் வைத்திருக்கப்படவேண்டியதான தராசுகள்.

16. உரிமம்பெற்ற வியாபாரி ஒவ்வொருவரும், உரிமம்பெற்ற அவரது வளவில் ஐம்பது கிலோகிராம்கள்வரை நிறுக்கக் கூடிய தராசுகளை வைத்திருத்தல் வேண்டும் ; அத்துடன் கட்டுப்பாட்டாளரால் அல்லது கட்டுப்பாட்டாளரால் அதிகாரமளிக்கப்பட்ட

| நிரை I சட்டவாக்கம் | நிரை II திருத்தங்கள் |
| --- | --- |
| | அலுவலர் ஒருவரால் அவ்வாறு வேண்டப்படுவதன் பேரில், அவ்வளவிலுள்ள எதேனும் இறப்பரை நிறுக்கச்செய்வித்தல் வேண்டும் என்பதுடன், 15 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்ட பதிவேட்டில் காட்டப்பட்டுள் ளவாறான நிறைகளுடன் அவ்வளவில் உள்ள இறப்பர் கையிருப்பின் நிறையை ஒப்பிடுவதற்கு கட்டுப்பாட்டாளரை அல்லது அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை விடுதலும் அவருக்கு எல்லா வசதியும் உதவியும் அளித்தலும் வேண்டும்.". |

2. இருபத்தைந்தாம் பிரிவில், அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுக :—

"(1) இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் ஒவ்வொரு நூறு கிலோகிராம் இறப்பருக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் கணக்கிடப்பட்ட இறப்பர்மீதான ஏற்றுமதித் தீர்வையொன்று விதிக்கப்படுதலும் அறவிடப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு தீர்மானமும் கசெற்றில் வெளியிடப்படுதல்வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், மீள ஏற்றுமதி செய்யப்படும் நோக்கத்துக்காக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டதென பிரதான சுங்கச் சேகரிப்பாளரது திருப்திக்கு எண்பிக்கப்படும் எதேனும் இறப்பர்மீது அத்தகைய தீர்வை எதுவும் விதிக்கப்படுதலோ அறவிடப்படுதலோ ஆகாது.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இடப்பட்ட தீர்வைத்தொகையானது, வேறுபடுத்தப்படலாம், அல்லது இடப்பட்ட தீர்வையானது, பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் எந்நேரத்திலேனும் நீக்கப்படலாம் ; அத்தகைய தீர்மானம் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.".

3. ஐம்பத்திரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "தோட்டம்", "சிறு பற்றுநிலம்" என்பவற்றுக்கான வரைவிலக்கணங்களுக்குப் பதிலாக முறையே பின்வரும் வரைவிலக்கணங்களை இடுக :—

"தோட்டம்" என்பது, பரப்பில் நான்கு எக்ரர்களுக்குக் குறையாததும் இறப்பர் மரங்களிலிருந்து இறப்பர்ப் பால் சேகரிக்கும் நோக்கங்களுக்காக அதில் இறப்பர்மரங்கள் வளர்க்கப்படுகின்றதுமான எதேனும் காணிப் பிரதேசம் எனப் பொருளாகும்;

"சிறு பற்றுநிலம்" என்பது, பரப்பில் நான்கு எக்ரர்களுக்குக் குறைந்ததும், இறப்பர் மரங்களிலிருந்து இறப்பர்ப் பால் சேகரிக்கும் நோக்கத்துக்காக அதில் இறப்பர் மரங்கள் வளர்க்கப்படுகின்றதுமான ஒரு காணிப் பிரதேசம் எனப் பொருளாகும்.

| நிரை I<br>சட்டவாக்கம் | நிரை II<br>திருத்தங்கள் |
|---|---|
| 7. இறப்பர் மீள் நடுகை மானியச் சட்டம் | 4. ஏழாம் பிரிவில் —<br><br>(1) அப் பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுக:—<br><br>"(1) இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் ஒவ்வொரு கிலோகிராம் தட்டு இறப்பருக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏற்றுமதித்தீர்வையொன்று விதிக்கப்படுதலும் அறவிடப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும்.<br><br>(2) இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் ஒவ்வொரு கிலோகிராம் துண்டு கிறேப் இறப்பருக்கும், பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏற்றுமதித் தீர்வையொன்று விதிக்கப்படுதலும் அறவிடப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும்.<br><br>(3) இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் ஒவ்வொரு கிலோகிராம் கிறேப் இறப்பருக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏற்றுமதித் தீர்வையொன்று விதிக்கப்படுதலும், அறவிடப்படுதலும், செலுத்தப்படுதலும் வேண்டும்."<br><br>(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை விட்டுவிடுக. |
| 8. இறப்பர் ஆராய்ச்சிக்கட்டளைச் சட்டம் | ஆறும் பிரிவில், அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுக :—<br><br>"(4) ஓராம் உட்பிரிவின்கீழ் தீர்வையைக் கணக்கிடும் நோக்கத்துக்காக, திரவ நிலையிலான ஒரு லீற்றர் இறப்பர் பாலானது ஒரு கிலோகிராமின் முன்னூற்றி ஐம்பது கூறுகளான உலர்ந்த இறப்பருக்குச் சமமானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன், உறைந்த நிலையிலான ஒன்றரை கிலோகிராம் இறப்பர் பாலானது ஒரு கிலோகிராம் உலர்ந்த இறப்பருக்குச் சமமானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.". |
| 9. முடிக்குரிய .. காணிகள் கட்டளைச் சட்டம் | 1. ஐம்பத்தைந்தாம் பிரிவில், அப்பிரிவின் (5) ஆம் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுக :—<br><br>"(5) பொது வாகனஞ் செல் பாதையொன்றின் அல்லது பொது வண்டிப் பாதையொன்றின் மையத்திலிருந்து பத்து மீற்றர்கள் தூரமொன்றுக்குள் அல்லது பொது நடைபாதையொன்றின் மையத்திலிருந்து மூன்று மீற்றர்களுக்குள் இருக்கின்ற, தனியார் ஆதனமாகவிராத எல்லாத் தனிக் காணிகளும் ;".<br><br>2. அறுபத்திமூன்றும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஒரு மைல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரத்து அறுநூறு மீற்றர்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம். |

| நிரை I<br>சட்டவாக்கம் | நிரை II<br>திருத்தங்கள் |
| --- | --- |
| | 3. தொண்ணூற்றுரும் பிரிவின் (7) ஆம் பந்தியில், "5,000 அடி" என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, "ஆயிரத்து அறுநூறு மீற்றர்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம். |
| | 4. நூற்றோராம் பிரிவில், "5,000 அடி" என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, "ஆயிரத்து அறுநூறு மீற்றர்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம். |
| | 5. அக்கட்டளைச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில், "பன்னிரண்டு ஏக்கர்கள், மூன்று ரூட், பத்து பேர்ச் அத்துடன் ஒரு பேர்ச்சின் பத்தில் ஏழு பங்கு (ஏ12 – ரூ3 – பே10.7)" என்னும் எண்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக, "5.1877 எக்ரர்கள்" என்னும் எண்களையும் சொல்லையும் இடுவதன்மூலம் |
| 10. காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் .. | நூற்றைம்பத்தாறும் பிரிவின் (இ) என்னும் பந்தியில், "5,000 அடி" என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக "ஆயிரத்து அறுநூறு மீற்றர்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம். |
| 11. 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் .. | 1. பதினெட்டாம் பிரிவில், அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுக :—<br><br>"(4) உரிமம்பெற்ற விற்பனையாளர் ஒவ்வொருவரும் உரிமம்பெற்ற அவரது வளவிலும், அத்துடன், இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகின்ற உற்பத்தியாளர் ஒவ்வொருவரும் அவரது தேயிலைத் தொழிற்சாலையிலும், ஐம்பது கிலோகிராம்கள்வரை நிறுக்கக்கூடிய தராசுகளை வைத்திருத்தல் வேண்டும் :<br><br>ஆயின், எவ்வாறுயினும், பதிவு செய்யப்பட்டுள்ளவரான தேயிலை அடைப்பவர் ஒருவரால் அடைக்கப்பட்டுள்ள தயாரிக்கப்பட்ட தேயிலையில் மட்டுமே வியாபாரம் நடாத்துபவரான உரிமம்பெற்ற விற்பனையாளர் ஒருவர், அவரது உரிமம்பெற்ற வளவில், இவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தராசை வைத்திருப்பது அவசியமாதலாகாது.".<br><br>2. அறுபத்திமூன்றும் பிரிவில், அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், முறையே "தோட்டம்", "சிறு பற்றுநிலம்" என்பவற்றுக்கான வரைவிலக்கணங்களுக்குப் பதிலாக, பின்வரும் வரைவிலக்கணங்களை இடுக :—<br><br>' "தோட்டம்" என்பது, பரப்பளவில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட எக்ரர்களைக் கொண்டுள்ளதும் தேயிலைச் செடிகளின் இலை, தயாரிக்கப்பட்ட தேயிலையாக மாற்றப்படுவதற்காகப் பறிக்கப்படும் நோக்கத்துக்கென அதில் தேயிலைச் செடிகள் வளர்க்கப்படுகின்றதுமான ஒரு காணிப்பிரதேசம் எனப் பொருளாகும் ;<br><br>"சிறு பற்றுநிலம்" என்பது, பரப்பளவில் நான்கு எக்ரர்களுக்குக் குறைவானதும், தேயிலைச் செடிகளின் இலை தயாரிக்கப்பட்ட தேயிலையாக மாற்றுவதற்காகப் பறிக்கப்படும் நோக்கத்துக்கென அதில் தேயிலைச்செடிகள் வளர்க்கப்படுகின்றதும்ஆன ஒரு காணிப்பிரதேசம் எனப் பொருளாகும் ;'. |

| நிரை I சட்டவாக்கம் | நிரை II திருத்தங்கள் |
|---|---|
| 12. 1958 ஆம் .. ஆண்டின் 2ஆம் இலக்க, தேயிலை, இறப்பர், தோட்டங்கள் (கூறுபடுத்தலைக் கட்டுப்படுத்தல்) சட்டம். | 1. எட்டாம் பிரிவில், அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுக :— |

"(1) பின்வரும் விடயங்களில் சபை அதன் சம்மதத்தை வழங்குதல் வேண்டும் :—

(அ) பல துண்டுகளாகப் பிரிக்கப்படுதலை உட்படுத்தாத தேயிலை அல்லது இறப்பர் தோட்டமொன்றின் சொத்தாண்மையைக் கைமாற்றுவதற்கு ;

(ஆ) பல துண்டுகளாகப் பிரிக்கப்படுதலை உட்படுத்தும் தேயிலை அல்லது இறப்பர் தோட்டமொன்றின் சொத்தாண்மையைக் கைமாற்றுவதற்கு அல்லது தேயிலை அல்லது இறப்பர் தோட்டமொன்றினை உறுதிமூலம் பிரிவிடுதல் செய்தற்கு அல்லது தேயிலை அல்லது இறப்பர் தோட்டமொன்று தொடர்பில் பிரிவிடுதல் வழக்குத் தொடுத்தற்கு –

(i) அத்தகைய தோட்டம் பிரிக்கப்படவிருக்கின்றதான அல்லது பிரிவிடுதல் செய்யப்படவிருக்கின்றதான எல்லாத் துண்டுகளும், அல்லது பரப்பளவில் நாற்பது எக்ரர்களுக்குக் குறையாததான அத்தகையவொன்று தவிர்ந்த எல்லாத் துண்டுகளும், தேசிய வீடமைப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் வீடமைப்புக் குறிக்கோள் ஒன்றுகவிருப்பதற்கென வெளிப்படுத்தப்பட்ட குறிக்கோள் ஒன்றுக்காக அல்லது ஏதேனும் கைத்தொழில் நோக்கத்துக்காக அல்லது ஏதேனும் பட்டினத்தின் அபிவிருத்திக்காக, அல்லது வேறேதேனும் விதித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படவிருக்கின்றனவெனின், அல்லது அடுத்தமைந்துள்ள தேயிலை அல்லது இறப்பர் தோட்டமொன்றேடு இணைக்கப்படவிருக்கின்றனவெனின், அத்துடன் அத்தகைய இணைப்பானது, இணைக்கப்படும் காணிகளின் திறமையானதும் சிக்கனமானதுமான முகாமைப்படுத்தலுக்கு வழிவகுக்குமெனச் சபை அபிப்பிராயப்படுமெனின் ;

(ii) சபையின் அபிப்பிராயத்தில், அத்தகைய தோட்டத்தின் கமத்தொழில் நிலைமை ஏலவே அவ்வளவு திருப்திகரமற்று இருப்பதால் அதனைத் துண்டுகளாகப் பிரித்தல் அல்லது பிரிவிடுதல் அத்தகைய நிலைமையை மோசமாகப் பாதிக்கக்கூடிய சாத்தியமிராதெனின் ; அல்லது

(iii) அத்தகைய தோட்டம் பிரிக்கப்படவிருக்கின்ற அல்லது பிரிவிடுதல் செய்யப்படவிருக்கின்ற அத்தகைய துண்டுகள் ஒவ்வொன்றும், தேயிலையின் விடயத்தில் பரப்பளவில் இருநூறு எக்ரர்களுக்குக் குறையாமலும் இறப்பரின் விடயத்தில் நூறு எக்ரர்களுக்குக் குறையாமலும் இருக்குமெனின், அத்துடன், அத்தகைய பிரிவினை அல்லது பிரிவிடுதல், சபையின் அபிப்பிராயத்தில், ஆதனத்தின் கமத்தொழில் நிலைமையை அல்லது முகாமைத் திறமையை மோசமாகப் பாதிக்கமாட்டாதெனின்,

சபையானது அதனது சம்மதத்தினை வழங்குதல் வேண்டும்.".

| நிரை I சட்டவாக்கம் | நிரை II திருத்தங்கள் |
| --- | --- |
| | 2. ஒன்பதாம் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுக :— |
| "1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழும், இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழும் குறித்த சில தோட்டங்களையும் சிறுபற்று நிலங்களையும் பதிவுசெய்தலைத் தடைசெய்தல். | 9. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூலமாக எது எவ்வாறிருப்பினும், நியமித்த நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தேயிலைத் தோட்டமொன்றைத் துண்டுகளாகப் பிரித்தமையால் அமைக்கப்பட்ட சிறு பற்று நிலமொன்று அல்லது பரப்பளவில் இருநூறு எக்கர்களுக்குக் குறைந்த தோட்டமொன்று, அத்தகைய பிரிவினையானது சபையின் முற்சம்மதத்தோடும், எந்நிபந்தனைகளுக்கமைய அத்தகைய சம்மதம் வழங்கப்பட்டதோ அந்நிபந்தனைகள் ஏதேனுமிருப்பின் அவைகளுக்கிணங்கவும், அத்தகைய தேயிலைத் தோட்டத்தின் சொத்தாண்மைக் கைமாற்றமொன்றின் அல்லது பிரிவிடலொன்றின் விளைவாகச் செய்யப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்படுதலாகாது. இவ்வுட்பிரிவில், "சிறு பற்றுநிலம்" என்னும் சொல்லமைப்பு, 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| | (2) இறப்பர்க் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூலமாக எது எவ்வாறிருப்பினும், நியமித்த நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இறப்பர் தோட்டமொன்றைத் துண்டுகளாகப் பிரித்தமையால் அமைக்கப்பட்ட சிறு பற்று நிலமொன்று அல்லது பரப்பளவில் நூறு எக்ரர்களுக்குக் குறைந்த தோட்டமொன்று, அத்தகைய பிரிவினையானது சபையின் முற்சம்மதத்தோடும் எந்நிபந்தனைகளுக்கமைய அத்தகைய சம்மதம் வழங்கப்பட்டதோ அந்நிபந்தனைகள் ஏதேனுமிருப்பின் அவைகளுக்கிணங்கவும், அத்தகைய இறப்பர் தோட்டத்தின் சொத்தாண்மைக் கைமாற்றமொன்றின் அல்லது பிரிவிடலொன்றின் விளைவாகச் செய்யப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்படுதலாகாது. இவ்வுட்பிரிவில் "சிறு பற்றுநிலம்" என்னும் சொல்லமைப்பு, இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும். ". |

3. இருபத்தைந்தாம் பிரிவில், "இறப்பர் தோட்டம்", "தேயிலைத் தோட்டம்" என்பவற்றுக்கான வரைவிலக்கணங்களுக்குப் பதிலாக முறையே பின்வரும் வரைவிலக்கணங்களை இடுக :—

| நிரை I<br>சட்டவாக்கம் | நிரை II<br>திருத்தங்கள் |
|---|---|
| | ' "இறப்பர் தோட்டம்" என்பது பரப்பளவில் நாற்பது எக்ரர்களுக்குக் குறையாத, இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ், பதிவுசெய்யப்பட்டிருக்கின்ற அல்லது பதிவுசெய்யப் பட்டதாகக் கருதப்பட்டிருக்கின்ற இறப்பர் தோட்டமொன்று எனப் பொருளாகும் ;<br><br>"தேயிலைத் தோட்டம்" என்பது, பரப்பளவில் நாற்பது எக்ரர்களுக்குக் குறையாததும், 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டிருக்கின்ற அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்டிருக்கின்ற . தேயிலைத் தோட்டமொன்று எனப் பொருளாகும் ;'. |
| 13. 1958 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தோட்டச் சந்தைகள (கட்டாயக் கொள்ளல்) சட்டம். | ஆறும் பிரிவில், "தோட்டம்" என்னும் வரைவிலக்கணத் துக்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுக:—<br><br>' "தோட்டம்" என்பது, பயிர்செய்யப்படுவதாயினும்சரி பயிர்செய்யப்படாததாயினும் சரி பரப்பளவில் எட்டு எக்ரர் களுக்குக் குறையாததும், புறம்பானதும் தனித்தறியக் கூடியதுமானதொரு ஆதனமாக அமைவதும், ஆனால் 1958 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேயிலை, இறப்பர் தோட்டங்கள் (கூறுபடுத்தலைக் கட்டுப்படுத்தல்) சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் எவ்வாதனத்தின் சொத்தாண்மையைக் கைமாற்றுவதற்கான விண்ணப்பமொன்று செய்யப்பட் டுள்ளதோ அவ்வேதேனும் ஆதனத்தை உள்ளடக்காத எதேனும் காணி அல்லது காணிகளின் தொகுதி எனப் பொருளாகும்;'. |
| 14. 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேயிலை (வரிவிதித்தலும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலும்) சட்டம். | 1. இரண்டாம் பிரிவில், அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுக:— |

"கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் விற்கப்படும் தேயிலையின் மீதும், இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்டு வெளிநாட்டுத் தேயிலை ஏலவிற்பனை ஒன்றில் விற்கப்படும் தேயிலையின் மீதான வரி.

2. (1) எதேனும் தேயிலை—

(அ) கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில்; அல்லது

(ஆ) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வெளிநாட்டுத் தேயிலை ஏலவிற்பனையில்,

கொழும்பு தேயிலை ஏலவிற்பனைகளில் தேயிலை எவ்விலைகளில் விற்கப்படுகின்றனவோ அந்நடப்பு விலைகளைக் கவனத்தில் கொண்டு கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் ஒரு விலையை, (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான கழிவுகளை இலங்கை நாணயத்திலிருக்கின்ற அல்லது இலங்கை நாணயத்தில் எடுத்துக்கூறப்படுகையிலிருக்கின்ற விலையிலிருந்து கழித்த பின்னர் விஞ்சுவதான விலையொன்றில் விற்கப்படுகின்றவிடத்து, அவ்வாறு விற்கப்படும் ஒவ்வொரு கிலோகிராம் தேயிலை தொடர்பிலும், கசெற்றில் வெளியிடப்படும்

| நிரை I | நிரை II |
|---|---|
| சட்டவாக்கம் | திருத்தங்கள் |

கட்டளைமூலம் அமைச்சரால் தீர்மானிக்கப் படவேண்டியதான அத்தகைய விகிதத்தில் வரியொன்று விதிக்கப்படுதலும், அறவிடப் படுதலும் செலுத்தப்படுதலும்வேண்டும்:

ஆயின், கொழும்பு தேயிலை ஏல விற்பனையொன்றில் ஏதேனும் தேயிலையின் முதலாவதான மீள்விற்பனை தொடர்பில் அதன்மீது இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் இக்காப்புவாசகம் இல்லாவிடின் செலுத்தப்படற்பாலதாகும் வரியானது, அத்தகைய முதலாவது மீள் விற்பனைக்கு முன்னர் அத்தகைய ஓர் ஏலவிற்பனையில் அந்தத் தேயிலை விற்பனை தொடர்பில், அவ்வேற்பாடுகளின்கீழ் அத்தேயிலை மீதான வரிக்கு மேலதிகமானதாகவிருக்கின்றவிடத்து அந்த ஏற்பாடுகளின்கீழான வரிக்குப் பதிலாக அத்தகைய முதலாவதான மீள்விற்பனை தொடர்பாக அந்தத் தேயிலை மீது அத்தகைய மேலதிகமான தொகைக்குச் சமமான வரியொன்று விதிக்கப்படவும் அறவிடப்படவும் செலுத்தப்படவும் வேண்டும்.

(2) ஒரு வெளிநாட்டில் தேயிலை ஏல விற்பனையொன்றில் விற்கப்படுவதற்கென இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்ட தேயிலை, அத்தகைய ஏலவிற்பனையொன்றில் ஏதேனுமோர் நாளில் ஒரு கிலோகிராம், எந்த விலையில் விற்கப்பட்டதோ அந்த விலையை இலங்கை நாணயத்தில் எடுத்துக்கூறும் நோக்கத்துக்காக நாணய மாற்று விகிதமானது, அங்கக் கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டதும் அந்நாளில் நடைமுறையிலிருப்பதும் ஆன நாணயமாற்று விகிதமாயிருத்தல் வேண்டும்.

(3) வெளிநாட்டில் தேயிலை ஏலவிற்பனையொன்றில் விற்கப்படுவதற்கென இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்ட தேயிலை, அத்தகைய ஏலவிற்பனையொன்றில் ஒரு கிலோகிராம் எந்த விலையில் விற்கப்படுகின்றதோ அந்த விலையிலிருந்து (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக செய்யப்படவேண்டிய கழிவுகளாவன—

(அ) அந்தக் கிலோகிராம் தேயிலையின் மீது இலங்கையில் செலுத்தப்பட்ட ஏற்றுமதித் தீர்வையும் ஏதேனும் மேலதிகத் தொகையும், அத்துடன்

| நிரை I<br>சட்டவாக்கம் | நிரை II<br>திருத்தங்கள் |
|---|---|

(ஆ) அத்தகைய வெளிநாட்டின் தேயிலை ஏலவிற்பனையொன்றில் விற்கப்படுவதற்கென இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் தேயிலை தொடர்பில், கப்பற் கேள்வு, காப்புறுதி, கையாளுகைச் செலவு ஆகியவற்றினை ஈடுசெய்வதற்கு கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நிருணயிக்கப்படும் தொகையும்,

ஆகும்.".

2. ஐந்தாம் பிரிவில், அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுக :—

"(1) ஆணையாளர், (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கொழும்பு தேயிலை ஏலவிற்பனையொன்றில் தேயிலை விற்கப்படும் நடப்பு விலைகளது அடிப்படையின் மீது —

(அ) இங்கிலிசு அன் ஸ்கொட்டிசு இணைந்த கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்க லிமிற்றெட்டினால் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஏதேனும் தேயிலையின் ; அல்லது

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தேயிலை அல்லாததும், அத்துடன், இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்வதற்கு இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட, அனுமதிப்பத்திரமொன்றின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டதுமான ஏதேனும் தேயிலையின்,

கிலோகிராம் ஒன்று, அத்தகைய தேயிலை ஏதேனும் நாளில் கொழும்பு தேயிலை ஏல விற்பனையொன்றில் விற்கப்படின் அந்நாளில் எவ்விலை பெறக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கக்கூடுமோ அவ்விலையை (அது இதன்பின்னர் இப்பிரிவில் "மதிப்பிடப்பட்ட விலை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தீர்மானித்தல் வேண்டும்.

(2) இலங்கையிலிருந்து எவ்வேதேனும் தேயிலை ஏற்றுமதிக்கு (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகின்றதோ அவ்வேதேனும் தேயிலை ஏற்றுமதியை அதிகாரமளித்து இப்பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னர் அத்தகைய ஒவ்வொரு கிலோகிராம் தேயிலை தொடர்பாகவும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்தில் வரியொன்று விதிக்கப்படுதலும், அறவிடப்படுதலும், செலுத்தப்படுதலும் வேண்டும். அத்தகைய விகிதமானது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மதிப்பிடப்பட்ட விலை, தொடர்பில் தீர்மானிக்கப்படுதல்வேண்டும்.".

3. ஏழாம் பிரிவில், அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்துக்குப் பதிலாக, பின்வரும் காப்புவாசகத்தை இடுக :—

"ஆயின்—

(அ) வெகுமதியொன்றென்ற வகையாக அஞ்சல் பொட்டலம் மூலம் அனுப்பப்படுவதும், அல்லது ஏதேனும் கலத்தின் அல்லது வானூர்தியின் பிரயாணியொருவரது சொந்தப்

| நிரை I<br>சட்டவாக்கம் | நிரை II<br>திருத்தங்கள் |
|---|---|

பொதியின் பாகமாக எடுத்துச்செல்லப்படுவதும், ஆறு கிலோகிராம் எடையை விஞ்சாததுமான ஏதேனும் தேயிலையின், அல்லது

(ஆ) வியாபார மாதிரிப்பொருளாக அனுப்பப்படும் ஏதேனும் தேயிலையின்,

ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் எதுவும் தேவைப்படுவதாதலாகாது. ".

4. பன்னிரண்டாம் பிரிவில், அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுக :—

" (1) கொழும்பு தேயிலை ஏலவிற்பனையொன்றில் ஏதேனும் தேயிலை விற்கப்படுமிடத்து, அவ்விற்பனை செய்யப்படும் நேரத்தில் அத்தேயிலையின் சொந்தக்காரராக இருப்பவரான ஆள், அவ்விற்பனைத் தேதிக்குப் பின்னர் மூன்று நாட்களுக்குப் பிந்தாமல், அத்தகைய தேயிலையின் விவரணத்தினையும், தொகையையும், ஒரு கிலோகிராம் தேயிலையின் விற்பனை விலையையும், அத்துடன் கொள்வனவுகாரரின் பெயரையும் முகவரியையும் எழுத்தில் ஆணையாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(2) ஒரு வெளிநாட்டில் தேயிலை ஏலவிற்பனையில் விற்கப்படுவதற்கென இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்ட ஏதேனும் தேயிலை அத்தகைய ஏலவிற்பனையொன்றில் விற்கப்படுமிடத்து, அவ்விற்பனை செய்யப்படும் நேரத்தில் அத்தேயிலையின் சொந்தக்காரராயிருப்பவரான ஆள், அவ்விற்பனைத் தேதிக்குப் பின்னர் பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல், அத்தகைய தேயிலையின் விவரணத்தினையும், தொகையையும், ஒரு கிலோகிராம் தேயிலையின் விற்பனை விலையையும், அத்துடன், கொள்வனவுகாரரின் பெயரையும் முகவரியையும் எழுத்தில் ஆணையாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.".

**15.** 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டம்

1. பதின்மூன்றாம் பிரிவில் –

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "இருபத்தைந்து ரூபா எழுபது சதம் மாத்திரம் என்ற வீதப்படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதப்படி" என்னும் சொற்களை இடுக ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "இப்பிரிவின்மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இப்பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுக.

2. முப்பத்தோராம் பிரிவில் –

(அ) "தோட்டம்" என்பதன் வரைவிலக்கணத்தில், "பத்து ஏக்கர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நான்கு ஏக்கர்கள்" என்னும் சொற்களையும், அத்துடன்

(ஆ) "சிறு பற்றுநிலம்" என்பதன் வரைவிலக்கணத்தில், "பத்து ஏக்கர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நான்கு ஏக்கர்கள்" என்னும் சொற்களையும்,

முறையே இடுக.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.